[illegible] சரித்ரம்

[illegible] சரித்ரம்

[illegible] (வை. கிரு)

1933

Q7
N33
223634.

12-60

அதிராம் பட்டணம் கடல்கரைத் தெரு

சமாதிஸ்தானம் ஹலரத்து,

ஹாஜா செய்து அலாவுத்தீன் ஜிஸ்தி அவுலியா
அவர்கள் பேரால்

# கொடியலங்காரச் சிந்தும்
# சரவிளக்கலங்காரச் சிந்தும்

அதிராம்பட்டணம்
கனம் செ. சி. அ. செய்து மீராலெப்பை
அவர்கள் பேரில் பாடிய,

பக்கா விருத்தம், கலித்துறை, இன்னிசையும்
அடங்கியது.

இஃது அதிராம்பட்டணம்
லெ. நெ. கவிமதுரம் நெய்னுமுகம்மது
புலவரால் இயற்றியதை

ஷையூர் கனம் மு. கா. மு. முஹம்மது
முஹைதீன் மரைக்காயர் அவர்கள்
பொருளுதவியைக் கொண்டும்

செ. சி. அ. அவர்கள் பாட்டிற்கு
ஷை சே. சி. அ. முஹம்மது முஹைதீன் மரைக்காயர்
பொருள் உதவியைக் கொண்டும்

மன்னார்குடி
[illegible] பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1933

[0—2—0

# முகவுரை.

பிஸ்மில்லா
ஹிர்றஹிமா
னிர்றஹீம்

அதிராம்பட்டணம் கடல்கரைத் தெரு சமாதின்கா ணம் விளங்கும் கலறத்துஹாஜா செயிது அலாவுத்தீன் ஷிஸ்த்தீ ஆண்டவரவர்கள் பேரால்கொடியலங்காரம் சாவிளக்கலங்காரச் சிந்துகளும் ஷை யூர் பூர்வீகவர்த் தகர் கனம் செ. சி. அ. செய்து மீருலெப்பை மரைக்கா யர் அவர்கள் பேரால் சாமகவி பக்கா, கலித்துறை இன்னிசை கவிகள் அடங்கியதை ஷை யூர் லெ. செ. கவிமதார மென்னும் செய்து முகம்மது புலவர் பாடி யது. ஷை ஹலறத்து ஹாஜா செயிது அலாவுதீன் ஆண்டவரவர்கள் கொடியலங்காரம் சாவிளக்கலங்காரச் சிந்துகளுக்கு ஷை யூர் புராதன வர்த்தகர் கனம் மூ. கா. மூ. முகம்மது முகிய்யதீன் மரைக்காயர் பொருளுதவியாலும் ஷை கனம் செ. சி. அ. செயிது மீருலெப்பை மரைக்காயர் றிரியான சாமகவி பக்கா, கலித்துறை, இன்னிசை கவிகளுக்கு ஷை செ. சி. அ. அப்துல் காதிறு மரைக்காயர் புத்திரர் முகம்மது முகிய்யதீன் மரைக்காயர் பொருளுதவி யாலும் ராஜமன்னார்குடி மதார்முகியியதீன் புலவரால் மேல்பார்த்து ஷை யூர

கணபதி அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது.

ஹிஜ்ரி 1352 இங்கிலீஷ் ஆண்டு 1933 மேயீ

அதிராம்பட்டினம் கடல்கரைத்தெரு சமாதிஸ்தானம்
ஹலாத்து செய்யிது ஹாஜா அலாவுதீன் ஜிஷ்த்தி
அவுலியா அவர்கள் பேரால் பாடிய

# கொடியலங்காரச்சிந்து

கலித்துரை.

படியாழும் ராஜராஜக்கள் போற்றும் பதமலரை
கெடியேற வாழ்க செல்லிமா நகரெங்கும் சிறப்புறவே
முடியேறப் பெரும் குருஹாஜா ஒலி தர்ஹா
கொடியேரும் சிறப்பலங்காரமது கூருவோமே.

[ராகம் முஹாரி ஏகதாளம்]
(பல்லவி)

கொடியலங்காரம் செய்து ஹாஜா ஒலியலங்காரம்—மிஹக்
கொஞ்சுமனுக்களெல்லாம் மஞ்சுர்தமாய் வரும் (கொடி)

(அனுபல்லவி)

கொடியலங்காறனன் நலமுடன் சபர்மாசம்
கோடிப்ராஹாசமாய் மோடிக்கையா யெங்கும்

படி கிடுகிடெனவே துடியுடனடத்திடும்
பாதம் போத்து மூமினுதர் ஹாஜா ஒலி (கொடி)

(சரணம்)

துடிமுறசைக ளெங்கும் அடிபெறும் நகருக்கள் 1
தந்து தத்தமிப்பலத் தம்பூருடனேடங்கா
இடி எனப்பீரங்கி கெடியென முழங்கவே
இதத்துட னடத்திட குலத்துகர் பானோர்கள்.

இம்பங் கொண்டாட செல்வீநகர்
தும்பங்களோட துதிபெற

அடிக்குமுறமைப்படி முடிக்கும் தொருவார்களின்
அலங்கிர்தமாய் வரும் இலங்கும் பலவிருதும்
செடிகளொளிரும் சிங்கக்கொடிகள் குடைகளுடன்
சிறக்கும் குங்கும வாசம் மணக்கும் ஹீர்ப்புகையும்

சேகாமாக ஒருமித்துப்
போகமுன்பாக தொண்டர்கள்

அடிபணிந்திடப் பிணிகொடிய ஞையகத்தின்ப
ஆதினுதனருள் நாளெல்லாமிருத்திட
குடிகள் செழித்து வளம் பலுவுதற் ககமதின்
குலத்தின் திருப் பேராய் தவத்துநர் ஸம்சுதீன்

குமாரருள் காஜா தீணிறைந்த
இமானோர்கள் ருஜா அருள்டங்கி

வடிவை பொதிந்தினிதம் சாருக் குகந்தசெல்வன்
வாசம் புகழும் விசுவாசர் ஹலீபா லெப்பை
கடிகமழ் பளிர் தங்கும் படியுயர் துஆஒத
காதலு டனே தீனோர்பாதம் போற்றும் நாதர் (கொடி)

அங்கமகிழ உளம் தங்கும் பிரகாசமாய் (2)
ஆதினிதி வளர ஓதிமுகரும் தாஆ
சங்கைபெறவே உலகெங்கும் ஊர்வலம் வர
சாகரம் போல்வெகு மோகமுடனே ஜனம்

சார்ந்து தீன்கூற வாலசூரிய
காந்தி போலேற தருத்திலங்க

மங்கையர்த்தெருத்தோரும் குங்குமம் கலந்தின்ப
மல்லிகைப் பன்னீர்கள் தெளித்து ஹார்த்தாலாத்தி
தங்கத்தால் நிறைகுடம் தளதளண்டொளிறவே
தாவும் வாசனை எங்கும் யேக ஒளிர்மயமாய்

சமைத்திடும்மோடி செங்கரத்தால்
அமைத்த பெண் கூடி பளபளென

கங்கணமிலங்கவே தங்கள் கரத்தைத்தேந்தி
ஹாஜத்துடனே துஆ வாசத்துடனே கேட்க
திங்கள் முகவதனந்தங்கும் குத்புஹாஜா
தேவரீர் கொடி எங்கும் சேகரப்படிவர

திவ்விய குணத்தார் மானேஜர் வேலை
செவ்வையாயெடுத்தார் ஹசனு மரைக்காயர்

தங்கள் சுகிர்தருடன் இங்கிர்தமாய்வர
சார்ந்த குணத்துடனே சேர்ந்த ஒஸ்னுப்பிள்ளை
இங்கிலிஷ் கோர்பெத்த கான்ஸ்டேபிள்மார் சூழ்ந்து
இன்புற நடத்த ஹாஜா கெம்பீரத்துடன் வரும் (கொடி)

3
பஞ்ச லெட்சணக்கொடி மஞ்சள் நீலக்கொடி
பச்சை தூயவெள்ளை நச்சேத்திர சிகப்பேரும்
குஞ்சம் குலுங்கக்கொடை பொன்வெள்ளி பிடிதங்கும்
குதுப்ஹாஜானார் தருத்துப்பல்லாக்குடன்

கூர் யானை ஒட்டை ஒடாவிரதம்
கூரெட்டு பட்டை                    ஆடிடும் ரதம்

ரஞ்சுர்தமாய்த்தெரு தஞ்சமுடனே சுத்த
ராகந் தொனிக்க வெகு மேள வாத்தியத்துடன்
மீஞ்சம் வாசனை பத்தி மேகமண்டலம் தொட்டு
மெட்டு மெட்டாய் புகை கப்பல் கெடிகளுடன்

வெடிக்கும் பீரங்கி அதின் சித்ர
படிக்க தாரங்கி                    விளங்க ச

றஞ்சு தெருக்கடோரும் கொஞ்சிக் கொடிகள்வர
அடந்த ஆயுதக்காரர் நடர்ந்த வஸ்தாவிகளும்
வஞ்சவாயிதக்காரர் பின் செல்லாகிரிடிகள்
வடிவுடன் விளையாடும் பிடியடி குஸ்திகள்

வருமவர் கெடியும் தலைநிறைய
இருக்கும்பெரு                    முடியும்

அஞ்சல் செயிது ஹாஜா விந்தமவர் பதத்தை
அச்சமுடனேபோத்தி விச்சித்திர கொடிவர
பஞ்சம்பரக்க செல்விம்பதிக் கெல்லா செளித்திட
பாசஷாசெய்யது ஹாஜா ராஜா தருத்துக்கின்ப                    (கொடி)

கடத்தேர் ஊர்கோலத்தை நடத்தும் புதுமையுடன்
கச்சிர்த சொல்வாக்கர் லெச்சுமி மணவாளன்
திடத்த னெஞ்சராம்காதர் தம்பிமரைக்காயர்
சேர்ந்த புதுதெருவார் உகர்ந்துகர்ந்தேகமாய்

சித்திரக் கொடியை அவர்கள் சொல்
பத்திரப்படியே                    உலகில்வர

கடலொலிபோல் முறசம் கடகடெண்ட திரவே
கார்குலம்தவின் மேடையாடி மெத்தையமைந்த

குடைவாழ்வு மிகுத்திடும் கொத்தவர் தெருத்தோரும்
குங்கும சந்தனத் தூபம் மங்கையர் பலமணம்

குளிர்ந்திடும் வாசம் ஜெகமுழுதும்
பொலிந்திடும்ரேசம் இன்பமுடன்

படத்திற் சித்திரமுற்ற பலவிருதுக் கொடியுடும்
பரிவாரத்துடன் சாகிபு தருகா முகப்பில்வந்து
அடரும் பாத்திஹா துஆ ஆமீன் மூமீன் கூற
அசன் நெணு மரைக்காயர் அதிகாரம் மிகவேற

அவர்கள் சந்திக்கும் அவ்வதிகாரப்
பவாது மெய்க்கும் அடியோர்கள்

இடையகற்றும் ஹாஜா ஷிடம்பெறும் தர்ஹாவில்
எகனருநால் வலபாகமுழுதும் சுத்தி
கடந்தகருணைக் கடல்கதத்தில் எல்லாம் சேரும்
கவிமதுரமென்னும் நெணுமுகம்மது கூறும் (கொடி)

## ஹாஜா செய்யது அலாவுதீன் ஆண்டவர்
## அவர்கள்பேரில் பாடிய
# சரவிளக்கலங்காரம்.

[ராகம் தேசிகதோடி ரூபகதாளம்]

கலித்துறை

அருமாதவக்கடலே அருள்வாசம் தங்கும் தூய
பெருமானருட்டங்கும் பேரின்பமே பிதாவிறகுல்
கருவாய்யுதித்திலகும் ஹலறத்து காஜா ஒலிதருகா
திருமேவும் சரவிளக்கலங்காரம் செப்புவேமே.

### பல்லவி

மகிமைதரும் திருச்சரவிளக்கதுமகிள்வைப் பாறன்னமே
செல்விநகறளகைப்பார் தினமே (மகி)

### அனுபல்லவி

சுகிர்தகெடி இருகொடி மாத்திலேறம்
சுந்தரகுருஹராஜா கந்திரிக்கலங்கிர்தம் (மகி)

### சரணம்

முத்துநவரெத்தின மளித்திய கிரிடமின்ன 1
மோகமேரு தஞ்சை மகாராஜர் கண்ணில்
உற்றபிணி விட்டகல கட்டிட மைபக்க ஜெயம்
ஓங்குபுகழ் பாங்குபெரும் வாசர் கீத்தம்

பத்து ஒருதல்மதில் உத்தனிதி காரணம்
பக்தி விளங்கும் பிறஹராஜர் உயர்
வெத்திபெரும் படைபாலானத்தலம் புகழும்துரை
வேந்தர் சம்சுதீன் மகாராஜர் துய்ய

கத்தனருள் பெத்த ஒலிஹராஜா ஹலறத்து
கதத்தை மறக்கா துரைராஜா நேசர்
வத்தகார தெருவுள்ள பாட்சா செல்வம்
வாய்ந்த கோலப்பிளுங்கில் சேர்ந்து வந்தேத்தி (மகி)

எத்திசை யெல்லாம் புகழும் ரெத்தினஜோதி விளக்கு 2
எறும் கொடிமாத்தை பாரும் மயிலே
உத்தமுடன் திருங்கத்து உயரும் காவியாடோல்
ஓங்கியே சபர்க்குந்தா டபரும் சித்திர

வித்தையுடன் ராவுத்தான் விளங்கும் திசைமுழுதும்
விதிர்ப்பு அமைந்தலெவராரும் அடுக்க

சுத்தமுடன் ஒப்பமிட்டபர்ம லஷியஷியா
திதிபெற கப்பியெனம் கயரும் இஸ்தங்கி

கொத்த கப்பியதில் பாட்டி சிதர்
கோர்த்துச் சேர பிருஸ் கூட்டி ஆஞ்சான்
சேர்த்து தாங்கும் ரீப்புமீட்டி கோசுடன்
சேரும் கொடி மரத்தில் எறும் சாவிளக்கு (மகி)

அலங்காரமாகவே இலங்கும் சாவிளக்கை 3
ஆசையுடனேசம்வைத்துப் பாரும் வெள்ளை
துலங்கும் செடி விளக்கு விளங்கும் திசைமுழுதும்
சொல்லரிய நல்ல சிகப்பேரும் ரோஜா

நிலவைப்பளித்திலங்கும் பகள நிற விளக்கும்
நேர்மையுள்ள பச்சைமர காரும் மேகம்
உலகம் சிறக்கும் நீலம் பளபளண்டே இலங்க
ஒத்துநல உள்ப்பளிங்கி சேரும் கூட்டம்

அலங்கக் கொள்ளாதபடி பலங்கொள் நிறை
அங்குலக் கணக்கிணையும் இரும்புள் வளையம்
பலபல விதஅணியா யுள் ஆக
பாத்திஹா சோபனத்துடன் எத்திக் கொடிமரத்தில் (பகி)

மண்டபம் இலங்கும்தீபம் என்றும் பிரகாசிக்க 4
மவுலூது ஓசையைப்பாரும் உலகம்
என்றிசை யெல்லாம்விளங்க வென்றமானேஜாவர்
ஏவல் பணிவிடைகளேறும் அப்போ

எந்தவெந்த முறுதுகளும் சொந்த முடனேயீந்து
எல்லவர் ஹாஜத்தும் நிறைவேறும் நல்ல
பந்தலலங்காரமுடன் பக்கீருதப்பிசு முழங்க
பற்பல வேடிக்கைகள் சேரும் நாதா

கந்திரிக் கலங்கிர்தம் பாரும் செய்து
ஹாஜா ஒலியின் புகழ்எறும் கவிமதுரம்
சொந்தமுடன் பாதம் போற்றுவோரும் வருஷம்
தோரும் கொடிமரத்தில் ஏறும் சரவிளக்கு (மகி)

கலித்துரை

ஷியூர் சொ. முத்துச்சாமி பிள்ளை பாடிய

சாற்றுக்கவி

கவியாரும் கார்மேகக்கடவுளின் ஹபீபிறசூல்
தவியாது மகிஷர் தாபந்தீர்சபாயத்தும் தருவார்
கபியோரின் பேறர் கொடியலங்காரமும் சரவிளக்கும்
கவியேரும் கவிமதுரக்கவிஞன் களர் நன்னூலே

(சரவிளக்கலங்காரம் முற்றிற்று.)

# முகவுரை

பிஸ்மில்லா
இற்றகிமா
னிற்றகீம்

அதிராம்பட்டணம் வருத்தக சிகாமணி கனம் செ. சி. அ. சித்தீக்கு முகம்மது மரைக்காயர் நற்றவப் புத்திரர் கனம் செய்யிது மீருலெப்பை மரைக்காயர் மகா தப மாட்சிமை தங்கித புஜபல வீரன் தரும சற்குண தயாள புருஷர் பரமகதியடைந்த பக்கா கலித்துறை, இன்னிசைகளும் ஷெய்யூர் லெ. நெ. கவிமதிரமென்னும் நெய்னாமுகம்மது புலவரால் பாடியதை ஷெய்யூர் கனம் செ. சி. அ. அப்துல் காதிறு மரைக்காயர் சிரேஷ்ட புத்திரர் கனம் முகம்மது முகிய்யதீன் மரைக்காயர் பொருளுதவி செய்து ராஜமன்னார்குடி மதார்முகிய்யதீன் புலவரால் மேல்பார்த்து

ராஜமன்னார்குடி
கணபதி அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

ஹிஜ்ரி 1352 இங்கிலீஷ் ஆண்டு 1933 பேபீ

# வெண்பா

மன்னர்புகழ் செல்விநகர் மார்க்கநெறி தன்னில்மிக
திண்ணமுறும்- சேஞ-சீஞ-ஆஞ கண்மகவாம்
செய்யிது மீராலெப்பை தேஹ வியோகம்பாட
துய்ய இறை காப்பதுவே தூண்.

## கலித்துறை

எல்லாபுகழும் புகழ்ச்சியும் வல்லபமும் இறையோன்தனக்கே
அல்லாவெனும் ஹக்கை அறிந்து வணங்கிடும் அண்ணலவர்
நல்லோர்களும் புகழ் செய்யிது மீராலெப்பை நற்பதவி
வல்லோன் அடைக்கலம் மாஹினர்பறலோக வள்ளலுமே.

## கலித்துறை

சீர்மேவும் அதிவீர நகரதில் திரவியவான்
கார்மேவும் கர்ப்பஹூங்காக்குடை கருணைனென்போர்
பார்மேவும் சேஞ சீஞ ஆஞ தபத்தரும் பாலரவர்
தார்மேவுமார்பர் செய்யிது மீராலெப்பரம் சார்ந்தனரே.

## கலித்துறை

கவிக்கோருயிராம் புலவற் கீந்திடும் தனதனவான்
புவிக்கோரிஸ்லாம் கணத்திற் சிறந்திடும் புண்ணியவான்
சபைக்கோரழகன் சஹாவத்து செய்வதில் சாதுரிய்யவான்
செவிக்கோரின்பம் செய்யிதுமீரா லெப்பை திருமொழியே

### கலித்துரை

விண்ணுடவர்புகழ் நபிஇறசூல்லா மேன்சறகை
என்னாளும் போத்தி இறைவனை தொழுது இறஞ்சிமனம்
உள்நாடிய பொருலெல்லா புலவர்க்கு உதவி செய்வார்
மண்ணுடவர்புகழ் செய்யிதுமீரா லெப்பை மாணிக்கமே

### கலித்துறை

பூமாதுவாசம் மாராது நாளும் பொருதும் குலக்
கோமானெண்டோதும் ஈகையில்ச் சிறந்த குணசேகரன்
சீமானந்தனத்தோர் செய்யிதுமீரா லெப்பை சிறப்புவாய்ந்த
ஈமானொடாஹிறம் இறையவன் ஹலறத்தில் ஏஹினரே.

### கலித்துறை

கந்தங் கமளந்தி வீரணகறதில் கனந்தனத்தோர்
எந்தன்சினேகர் மூனா காவனா மூனா இனியசுதன்
சந்தோஷவான் முகம்மது முகிப்பிதீன் சறமுறையை
தந்துகவி சொன்னேன் குத்தம்வராது தர்ப்பறன் துணையே

---

## இன்னிசை.

வல்வினை யறப்போக்கும் வருமைகளும் தாமகலும்
தொல்வினை அணுகாது தொழுகைவணக்கம் சிறந்த
செல்வக் களஞ்சியரும் செய்யிதுமீராலெப்பை என்போர்
கல்விக் களஞ்சியமே கண்ணே சிகாமணியே. 1

பூவில்வறிஞ் ஞோர்களுக்கும் புண்ணியமிக வளித்தோர்
பாவலர் நாவலர்க்கும் பரிசுமிகக் கொடுத்தோர்
தேவர்புகழ் வணக்கன் செய்யிதுமீராலெப்பை என்போர்
காவலர்பற மடைந்தார் கண்ணே சிகாமணியே. 2

வந்தா சமுத்திரமாம் வள்ளலொலி முஹிதீனப்பா
பொற்றாள் பலமலனை போற்றும் செய்துமீராலெப்பை
கற்றோன் வணக்கம்நிக்கீர் காலவணக்கம் புரிந்தே
கற்றோர் பறமடைந்தார் கண்ணே சிகாமணியே. 3

பட்டினனன் னதிவீரநகர் பாக்கிய சித்திக்குமுகம்மது
மெட்டார் சேனு சீனு ஆறு மேன்மகவாய் வந்துதித்து
கிட்டங்கியும் வியாபாரம் கீர்த்தியாய் நடத்திலாபம்
கட்டிடும் செயதுமீருலெப்பை கண்ணே சிகாமணியே. 4

உற்றார் பொருந்தநல்ல உறமுறையோர் தான்மகிழ
பத்தாவுக்கேற்ற இன்ப பசுவிறதை எண்டுறைக்க
சித்தமகிழ் நன்மனைவி சிறப்புடன் எடுத்துசுர்ந்த
கத்தார் செய்யிதுமீராலெப்பை கண்ணே சிகாமணியே 5

மனமகிழத் தன்மனைவி மாசம் பலதானியமும்
தினமகிழ நீருரும் சிலவு செய்யவே கொடுத்தும்
கனகரெட்ன மாணிக்கத்தால் கனகநகையும் செய்தணிந்து
சினமகலவே சுகித்த ஜெம்மல் சிகாமணியே. 6

வந்தோர் பசிதீர அன்னம் வாரிமிகக் கொடுப்பார்
சொந்த இனத்தவர்க்கும் சொகுசாய்ப் படி அளப்பார்
சந்ததியுகாத்தினம் சகலநிதி பணம்காகம்
எந்தநாள் மீந்தாதரிக்கும் எஜமான் சிகாமணியே. 7

உறைக்கும் தெளகீதைவிளக்கும் உருநி சாஹின்வணக்கம்
தரைக்குளாணி வேறதுவே தானெடுத்த மல்புரிந்தே
புறைக்கிமிகக் கைப்பொருளைபொருந்த கொடுத்தும் அமல்
நிறைக்கும் செயிதுமீருலெப்பை நிதியே சிகாமணியே. 8

சிந்தாத் திரவியமே செல்வநிதி பொக்கிஷமாம்
சந்தோஷமாய் புறைகள்தா நடத்தும் சீமானே

நிந்தாள்ச் சினியம்புகார் நெறிநீதிக் தன்னையுவர்
ஹறந்தார் செய்து மீராலெப்பை கண்ணே சிகாமணியே. 9

அஞ்சிலொன்றில்லிலாத்தியல் அருளும் கஜ்ஜாவுமரு
தஞ்சமுறும் மக்கநகர் தாகா நபியிறசூல்
செஞ்சொல் மறைவணக்கம் செய்யும் செய்துமீருலெப்பை
பஞ்சபாவம் மறப்பெற்றார் பரமே சிகாமணியே. 10

விளக்கும் சரீகத்தது மின்னொளிபோலும் அக்கிதா
தனைக்கும் வழுதையுன்ற தவ்ஹீதொலி மார்பதத்தை
செளிக்கவுவப்புகர்ந்த செய்துமீரு லெப்பையவர்
வளிக்கு நல்லமல் செய்து பறமடைந்தார் சிகாமணியே. 11

வாழ்த்தும் கவிமதுரம் மாசறவே தானுரைக்கும்
நாத்திசெயுகர் முஸ்லீம் நவின்றிடவே இன்பமுடன்
தோத்திரமா யின்னியை சொன்னேன் செய்துமீராலெக்கே
காத்தருள் வாயாறஹீமே கண்ணே சிகாமணியே. 12

### ஷையூர் சொ. முத்துசாமி பிள்ளை பாடிய

### சாற்றுகவி

### கலித்துறை

கற்றுமறைத் தடஞ்சூள் மக்கமா நன்னகரிலே
கத்தாவின் தூதாய்ப்பிறந்தாரை தந்த கண்சரணை
சித்தமீதேர்ந்து தினகால் வணக்கன் செய்து
கத்தாவின் சாம கவி கவிமதிரக்கவிஞன் களரிதரே.

ராஜமன்னார்குடி
கணபதி அச்சுயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.